தினகரன்

சாலை விபத்தில் பலியான

# தொழிலாளி குடும்பத்தினருக்கு ஓய்வூதிய ஆணை

## இ.எஸ்.ஐ. சார்பில் வழங்கப்பட்டது




சாலை விபத்தில் பலியான தொழிலாளியின் குடும்பத்தினரிடம் மாதாந்திர ஓய்வூதிய ஆணை மற்றும் இழப்பீடு வழங்கப்பட்டது.

திருப்பூர், மே 28: திருப்பூர் அவிநாசிலிங்கபாளையம் பகுதியில் உள்ள நிறுவனத்தில் அதே பகுதியை சேர்ந்த லதா (43) என்பவர் பணியாற்றி வந்தார். கடந்த ஆண்டு ஆகஸ்ட மாதம் பணிக்கு சென்ற போது சாலை விபத்தில் லதா பலியானார். இவர் இ.எஸ்.ஐ.யில் பதிவு செய்திருந்தார். இதனால், சார்ந்தோருக்கு மாதாந்திர ஓய்வூதிய ஆணை கொடுக்கப்பட்டது.

இ.எஸ்.ஐ. சார் மண்டல அலுவலகத்தின் இணை இயக்குநர் (பொறுப்பு) கே.ஆர்.ரவிக்குமார் ஆணைப்படி மற்றும் கூடுதல் இயக்குநர் பெருமாள் வழிகாட்டுதலின்படி கிளை அலுவலகத்தில் கே.என்.பி.புரம் கிளை மேலாளர் இந்திரலேகா, லதா குடும்பத்தினரிடம் மாதாந்திர ஓய்வூதிய ஆணை மற்றும் ரூ.1 லட்சத்து 39 ஆயிரத்து 604 மதிப்புள்ள காசோலையை வழங்கினார்.

மேலும், பண உதவி ஆணையை பெற்றுக் கொண்ட சார்ந்திருப்போரும், காப்பீட்டாளர்களும் தொழிலாளர் அரசு காப்பீட்டுக் கழகத்திற்கும், அலுவலர்களுக்கும் நன்றியினை தெரிவித்துக் கொண்டனர்.

தொழிலாளர் அரசு காப்பீட்டு கழகம் சார்பாக கோவை, ஈரோடு, நீலகிரி, திருப்பூர் மாவட்டங்களில் சமூகப் பாதுகாப்பு திட்டத்தின் கீழ் காப்பீடு பெற்ற தொழிலாளர்களுக்கு இடர் ஏற்படும் காலங்களில் பணம் மற்றும் மருத்துவ உதவிகள் வழங்கப்பட்டு வருகிறது. பல்வேறு பணப்பயன்களின் ஒரு அங்கமாக நீண்ட கால உதவித்தொகை (ஓய்வூதியம்) பயனீட்டாளர்களுக்கும் அவர்தம் சார்ந்தோருக்கும் வழங்கப்படுகிறது.

இதுபோல் நிரந்தர உடல் ஊன உதவித் தொகை மற்றும் சார்ந்தோருக்கான உதவித்தொகை பணியில் சேர்ந்த முதல் நாளிலிருந்தே வழங்கப்படுகிறது. இந்த பண உதவிகள் காப்பீட்டாளர் சார்ந்த கிளை அலுவலக மேலாளரின் முயற்சியால் குறைந்த கால அளவில் விசாரிக்கப்பட்டு உதவித்தொகை நிர்ணயிக்கப்பட்டு வழங்கப்படுகிறது என மேலாளர் இந்திரலேகா கூறினார்.